# தேச பக்தி
DHESA BAKTHI

நடுநிலை காலை நாளிதழ்

RNI.No.TNTAM/2022/86012

ஆசிரியர் : G. ராஜா 9842364068 இணைஆசிரியர் : R. கண்ணன் 9994422779

★மலர்:05 ★இதழ்:156 ★06.10.2026 ★தமிழ் நாளிதழ் ★செவ்வாய்கிழமை ★பக்கம்-4 ★விலை.ரூ.5/- சென்னை

★Volume:05 ★Issue:156 ★06.10.2026 ★TamilDaily ★Tuesday ★Page-4 ★Price-₹5/- Chennai




## மக்கள் குறைதீர் கூட்டத்தில் 3 மாற்றுத்திறனாளிகளுக்கு ரூ.38,716 மதிப்பில் நலத்திட்ட உதவிகள்;770 மனுக்களை பெற்று விரைந்து நடவடிக்கை எடுக்க ஆட்சியர் வந்தனா கார்க் உத்தரவு

திருவண்ணாமலை மாவட்ட ஆட்சியர் அலுவலகத்தில் நடைபெற்ற மக்கள்குறைதீர்வுநாள்கூட்டத்தில்பொது மக்களிடமிருந்து 770 கோரிக்கை மனுக்களை மாவட்ட ஆட்சித்தலைவர் வந்தனா கார்க் பெற்றுக்கொண்டு, அவற்றின் மீது விரைந்து நடவடிக்கை எடுத்து தீர்வு காண சம்பந்தப்பட்ட துறை அலுவலர்களுக்கு அறிவுறுத்தினார்.

மக்கள் குறைதீர்வு நாள் கூட்டத்தில் கல்வி உதவித்தொகை, வங்கிக் கடனுதவி, முதியோர் உதவித்தொகை, வீட்டுமனைப் பட்டா, சாதிச்சான்று, வேலைவாய்ப்பு, விதவை உதவித்தொகை, மாற்றுத்திறனாளிகளுக்கான உதவித்தொகை மற்றும் உதவி உபகரணங்கள், சாலை வசதி, பிரதமரின் அனைவருக்கும் வீடு வழங்கும் திட்டம், வேளாண்பயிர்க்கடன், புதியநீர்த்தேக்கத் தொட்டி அமைத்தல், தாட்கோ கடனுதவி, கூட்டுறவுசங்கங்கள்மூலம் பயிர்க்கடன் உள்ளிட்ட பல்வேறு கோரிக்கைகள் தொடர்பான மனுக்கள் பெறப்பட்டன.

பொதுமக்கள் அளித்த மனுக்கள் அனைத்தையும் உரிய துறைகளுக்கு அனுப்பி வைத்து, ஒவ்வொரு கோரிக்கையையும் தாமதமின்றி பரிசீலித்து, தகுதியான பயனாளிகளுக்கு அரசின் நலத்திட்டப் பலன்கள் சென்றடைவதை உறுதி செய்ய வேண்டும் என மாவட்ட ஆட்சியர் அதிகாரிகளுக்கு அறிவுறுத்தினார்.

கூட்டத்தின் போது மாற்றுத்திறனாளிகளிடமிருந்து பெறப்பட்ட உதவி உபகரணங்களுக்கான மனுக்களின் மீது உடனடி நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டது. அதன் அடிப்படையில் 2 மாற்றுத்திறனாளிகளுக்கு ரூ.31,500 மதிப்பிலான சக்கர நாற்காலிகளும், அறிவுசார் குறைபாடுடைய ஒரு குழந்தைக்கு ரூ.7,216 மதிப்பிலான கார்னர் சீட்டும்வழங்கப்பட்டது. இதன்மூலம் 3பயனாளிகளுக்குமொத்தம்ரூ.38,716 மதிப்பிலான நலத்திட்ட உதவிகள் வழங்கப்பட்டன.

மேலும், முதலமைச்சரின் விரிவான மருத்துவக் காப்பீட்டுத் திட்ட அட்டை கோரி பெறப்பட்ட மனுவின் மீது உடனடி நடவடிக்கை எடுக்கப்பட்டு, சம்பந்தப்பட்ட பயனாளிக்கு மாவட்ட ஆட்சித்தலைவர் மருத்துவக் காப்பீட்டு அட்டையை வழங்கினார்.

இதனிடையே, செய்யாறு சார் ஆட்சியர் அலுவலகத்தில் நடைபெற்ற மக்கள் குறைதீர்வு நாள் கூட்டத்தில் 161 மனுக்களும், ஆரணி வருவாய் கோட்டாட்சியர் அலுவலகத்தில் நடைபெற்ற கூட்டத்தில் 71 மனுக்களும் பெறப்பட்டு, உரிய நடவடிக்கைக்காக சம்பந்தப்பட்ட துறை அலுவலர்களிடம் ஒப்படைக்கப்பட்டன.

முன்னதாக, மாவட்ட ஆட்சியர்அலுவலக வளாகத்தில் அமைந்துள்ள மின்னணு வாக்குப்பதிவு இயந்திரங்களின் பாதுகாப்பு வைப்பறையை மாவட்ட ஆட்சித்தலைவர் பார்வையிட்டு ஆய்வு செய்தார்.

தொழிலாளர் நலன் மற்றும் திறன் மேம்பாட்டுத் துறை, வேலைவாய்ப்பு மற்றும் பயிற்சித் துறை சார்பில் நடைபெறவுள்ள மாபெரும் தனியார் துறை வேலைவாய்ப்பு முகாம் குறித்து இளைஞர்கள் மற்றும் வேலைநாடுநர்களிடையே விழிப்புணர்வு ஏற்படுத்தும் வகையில் ஏற்பாடு செய்யப்பட்ட விளம்பர வாகனத்தையும் மாவட்ட ஆட்சித்தலைவர் கொடியசைத்து தொடங்கி வைத்தார்.

நிகழ்ச்சியில் மாவட்ட வருவாய் அலுவலர் அ. சிவசுப்பிரமணியன், திருவண்ணாமலை வருவாய் கோட்டாட்சியர் செல்வம், தனித்துணை ஆட்சியர் (சமூக பாதுகாப்பு) இளவரசன், மாவட்ட ஆட்சியரின் நேர்முக உதவியாளர் (வேளாண்மை) மற்றும் இணை இயக்குநர் (பொறுப்பு) மலர்விழி, மாவட்ட வழங்கல் மற்றும் நுகர்வோர் பாதுகாப்புஅலுவலர்சுஜாதா, மாவட்ட சுகாதார அலுவலர் டாக்டர் வெங்கட்ரமணன், திட்ட அலுவலர் (பழங்குடியினர் நலன்) கலைச்செல்வி, ஆதிதிராவிடர் மற்றும் பழங்குடியினர் நல அலுவலர் செந்தில்குமரன், மாவட்ட பிற்படுத்தப்பட்டோர் நல அலுவலர் மதுசெழியன், உதவி ஆணையர் (கலால்) வளர்மதி, மாற்றுத்திறனாளிகள் நல அலுவலர் சாரதா, மாவட்ட வேலைவாய்ப்பு அலுவலர் யோகலட்சுமி உள்ளிட்ட பல்வேறு துறை அலுவலர்கள் கலந்து கொண்டனர்.

மாவட்ட ஆட்சித்தலைவர் மரு.இரா.வைத்திநாதன், இ.ஆ.ப., அவர்கள் செய்திக்குறிப்பில்தெரிவித்துள்ளதாவது,அரசு,அரசுஉதவிபெறும்கல்விநிறுவனங்கள் மற்றும் தனியார் தொழிற்கல்லூரிகளில் அரசு ஒதுக்கீட்டின் கீழ் பயிலும் பிற்படுத்தப்பட்ட (பி.வ), மிகப்பிற்படுத்தப்பட்ட( மி.பி.வ) மற்றும் சீர்மரபினர் (சீ.ம) மாணவ/மாணவியருக்கு 202627ஆம் கல்வியாண்டிற்கான பிரதம மந்திரி பள்ளி மேற்படிப்பு கல்வி உதவித்தொகைத் திட்டம் (PM YASASVI Post Matric Scholarship Scheme) கீழ்க்கண்ட நிபந்தனைகளின் அடிப்படையில் பிற்படுத்தப்பட்டோர், மிகப்பிற்படுத்தப்பட்டோர் (ம) சிறுபான்மையினர் நலத்துறை மூலம் வருடந்தோறும் செயல்படுத்தப்பட்டு வருகிறது. மூன்றாண்டு I. அரசு மற்றும் அரசு உதவி பெறும் கலை மற்றும் அறிவியல் கல்லூரிகளில் இளங்கலை பட்டப்படிப்பு பயிலும் பி.வ/மி.பி.வ/சீ.ம மாணவ/மாணவியருக்கு எவ்வித நிபந்தனையுமின்றி கல்வி உதவித்தொகை வழங்கப்படுகிறது.II. பாலிடெக்னிக், இளங்கலை ( தொழிற்படிப்பு), முதுகலை (ம) ஆராய்ச்சி படிப்புகள் பயிலும் மாணாக்கர்களுக்கு குடும்ப ஆண்டு வருமானம் ரூ.2,50,000/க்கு மிகாமல் இருத்தல் வேண்டும்.

விண்ணப்பிக்கும் முறை:

20262027 ஆம் கல்வியாண்டில் மேற்படி கல்வி உதவித்தொகைத் (UMIS) (https://umis.tn.gov.in/) University Management Information System கொள்ளலாம். தகுதியுள்ள மாணாக்கர்கள்தாங்கள் பயிலும் கல்லூரியில் கல்வி உதவித்தொகைக்கென உள்ள ஒருங்கிணைப்பு அலுவலரை (Nodal Officer) அணுகி, https://umis.tn.gov.in/ என்ற இணையதளத்தின் மூலம் 21.10.2026க்குள் விண்ணப்பிக்கலாம். மேலும், கல்வி உதவித்தொகை தொடர்பான சந்தேகங்களுக்கு மாவட்ட ஆட்சியர் அலுவலகத்தில் உள்ள மாவட்ட பிற்படுத்தப்பட்டோர் மற்றும் சிறுபான்மையினர் நல அலுவலரை, அலுவலக நேரங்களில் அணுகி தொடர்பு கொள்ளலாம் என மாவட்ட ஆட்சித்தலைவர் மரு.இரா.வைத்திநாதன், இ.ஆ.ப., அவர்கள் தெரிவித்துள்ளார்.

# அறநிலையத்துறை அதிகாரிகளா? அறங்காவலர்களா? கோவில்களை இயக்குவது யார்?

## தேனியில் தொடரும் அதிகாரப் போட்டியால் பக்தர்கள் கடும் அவதி

தேனி மாவட்டத்தில் உள்ள 100க்கும் மேற்பட்ட அருள்மிகு திருக்கோவில்களில், இந்து சமய அறநிலையத்துறை அதிகாரிகளுக்கும் உள்ளூர் அறங்காவலர்களுக்கும் இடையே நிலவி வரும் அதிகாரம் தொடர்பான இழுபறிகள் மற்றும் கருத்து வேறுபாடுகள் காரணமாக கோவில் நிர்வாக செயல்பாடுகளில் சுணக்கம் ஏற்பட்டுள்ளதாக சமூக ஆர்வலர்கள் சுட்டிக்காட்டுகின்றனர். தமிழ்நாட்டில் மாண்புமிகு முதலமைச்சர் திரு. C. ஜோசப் விஜய் அவர்களின் தலைமையிலான புதிய அரசு பொறுப்பேற்ற பிறகு, ஆன்மீக தலங்களில் பக்தர்களுக்கான வசதிகளை மேம்படுத்த பல்வேறு தொடர் நடவடிக்கைகள் எடுக்கப்பட்டு வருகின்றன. இந்நிலையில், தேனி உள்ளிட்ட பல்வேறு மாவட்டங்களில் அறநிலையத்துறை செயல் அலுவலர்களுக்கும் (EO) புதிதாக பொறுப்பேற்கும் அறங்காவலர்களுக்கும் இடையே பரஸ்பர இணக்கமான சூழல் இல்லாதது பக்தர்களிடையே அதிருப்தியை உருவாக்கியுள்ளது. கோவில்களின் பாரம்பரியத்தை பேணுதல், சொத்துக்களை பாதுகாத்தல் மற்றும் வழிபாட்டு நெறிமுறைகளை தொய்வின்றி நடத்துவது ஆகியவை அறங்காவலர்களின் முதன்மை பொறுப்பாகும். அதேவேளையில், அரசின் சட்ட விதிமுறைகளின்படி கணக்கு வழக்குகளை தணிக்கை செய்வதும், சொத்து சம்பந்தப்பட்ட பதிவேடுகளை முறைப்படுத்துவதும் செயல் அலுவலர்களின் பணியாகும். இவர்கள் இருவரும் இணைந்து செயலாற்றினால் மட்டுமே கோவிலின் புனிதமும் பராமரிப்பும் பாதுகாக்கப்படும். ஆனால், நடைமுறையில் இருதரப்பினருக்கும் இடையே நிலவும் அதிகாரவரம்பு சிக்கல்களால் வரவுசெலவு கணக்குகள், கோவில் திருப்பணிகள், பிரசாத விநியோகம் உள்ளிட்ட அன்றாட செயல்பாடுகளில் தேக்கம் ஏற்பட்டு, கோவிலுக்கு வரும் ஆன்மீக அன்பர்களே பெரும் பாதிப்புக்கு உள்ளாகின்றனர்.

தற்போதுள்ள நிர்வாக அமைப்பின்படி, தேனி மாவட்டம் தனி மண்டலமாக இல்லாததால், திண்டுக்கல்லை தலைமையிடமாக கொண்டு இயங்கும் அறநிலையத்துறை இணை ஆணையரே (JC) தேனி மண்டலத்தையும் சேர்த்து




கவனித்து வருகிறார். தேனி மாவட்டத்தில் உதவி ஆணையர் (AC) மற்றும் ஆய்வாளர்கள் (Inspectors) மட்டுமே உள்ளூர் அளவில் இயங்கி வந்தாலும், அவர்களுக்கு முழுமையான தணிக்கை செய்யும் அதிகாரமோ அல்லது தனிச்சையாக முக்கிய முடிவுகளை எடுக்கும் அதிகார வரம்போ சட்டப்பூர்வமாக வழங்கப்படவில்லை.

இதனால், சிறு பிரச்சனைகளுக்கும் திண்டுக்கல் இணை ஆணையரின் ஒப்புதலுக்காக காத்திருக்க வேண்டிய சூழல் நிலவுகிறது. ஒரே நேரத்தில் பல மாவட்டங்களின் பிரம்மாண்ட நிர்வாக பொறுப்புகளை கவனிக்கும் மண்டல இணை ஆணையர்களால், அனைத்து கோவில்களுக்கும் நேரில் சென்று தினசரி கள ஆய்வுகளை மேற்கொள்வதும் சாத்தியமற்றதாக உள்ளது. மாவட்ட அளவில் தணிக்கை செய்யும் அதிகாரப்பூர்வ அதிகாரி இல்லாத இந்த நிர்வாக இடைவெளியை பயன்படுத்தி, உள்ளூர்கோவில் நிர்வாகங்களில் பல்வேறு முறைகேடுகளும் இழுபறிகளும் தொடர்கின்றன.

இதற்கு நிரந்தரமாக தீர்வு காணும் வகையில், மாண்புமிகு முதலமைச்சர் திரு. C. ஜோசப் விஜய் அவர்களும், இந்து சமய அறநிலையத்துறை அமைச்சர் திரு.ரமேஷ் அவர்களும் சிறப்பு கவனம் செலுத்த வேண்டும். மண்டல அளவிலான வழக்கமான இணை ஆணையர் பணியிடங்கள் தவிர்த்து, தமிழ்நாடு முழுவதும் ஒவ்வொரு மாவட்டத்திற்கும் என சிறப்பு தணிக்கை அதிகாரிகளை (Special Inspection / Audit Officers) தனியாக நியமிக்க வேண்டும்.

இந்த அதிகாரிகள் தினசரி கோவில் வாரியாக திட்டமிடப்பட்ட கால அட்டவணை (Schedule) அமைத்து, நேரடி கள ஆய்வுகளையும் கணக்கு தணிக்கைகளையும் தீவிரமாக மேற்கொள்ள அரசாணை வெளியிட வேண்டும். மேலும், மாவட்ட ஆட்சியர்தலைமையில் மாதந்தோறும் ஆய்வு கூட்டங்கள் நடத்தி கோவில் நிர்வாகங்களை சீரமைக்க நடவடிக்கை எடுக்க வேண்டும் என்றும் பக்தர்கள் அரசுக்கு கோரிக்கை விடுத்துள்ளனர்.

# தேனி மாவட்டத்தில் 2026,27ம் ஆண்டில் பிரதம மந்திரி பயிர் காப்பீட்டு திட்டம் சம்பா சிறப்பு பருவம் நெல் பயிருக்கு செயல்படுத்தப்பட்டு வருகிறது

## மாவட்ட ஆட்சித்தலைவர் இரா.வைத்திநாதன் தகவல்

மாவட்ட ஆட்சித்தலைவர் மரு.இரா.வைத்திநாதன், இ.ஆ.ப, அவர்கள் செய்திக்குறிப்பில் தெரிவித்துள்ளதாவது, தேனி மாவட்டத்தில் 202627ம் ஆண்டில் பிரதம மந்திரி பயிர் காப்பீட்டுத் திட்டம் சம்பா சிறப்பு பருவம் நெல் பயிருக்கு செயல்படுத்தப்பட்டு வருகிறது. அந்த வகையில் தேனி மாவட்டத்தில் பயிர் காப்பீட்டுத் திட்டம் ஷேமா ஜெனரல் இன்சூரன்ஸ் கம்பெனி லிட் காப்பீட்டு நிறுவனத்தினால் செயல்படுத்தப்படுகிறது. தற்போது தேனி மாவட்டத்தில் நெல் சம்பா சிறப்பு பருவ பயிருக்கு ஆண்டிபட்டி, கண்டமனூர், இராஜதானி, தேவதானப்பட்டி, தென்கரை, தேனி, கொடுவிலார்பட்டி, கம்பம், உத்தமபாளையம், சின்னமனூர், கோடாங்கிப்பட்டி, மார்க்கையன்கோட்டை, போடிநாயக்கனூர், ராசிங்காபுரம் ஆகிய 14 குறு வட்டங்கள் (பிர்காக்கள்) அறிவிப்பு செய்யப்பட்டுள்ளன. சம்பா சிறப்பு பருவத்தில் காப்பீடு செய்யப்படும் நெற்பயிர்களை நிர்ணயிக்கப்பட்ட காலக்கெடுவான வருகிற நவம்பர் மாதம் 16ந் தேதிக்குள்விவசாயிகள் தங்கள் விருப்பத்தின் பேரில் காப்பீடு செய்ய வேண்டும்.

ஒரு ஏக்கருக்கான பயிர் காப்பீட்டுத் தொகை ரூ. 38,828ல் விவசாயிகள் 1.5 சதவீதம் மட்டும் காப்பீட்டுக் கட்டணமாக நெற்பயிருக்கு ஏக்கருக்கு ரூ.589.50 மட்டும் செலுத்தினால் போதுமானது. எனவே சம்பா நெல் சிறப்பு பருவம் சாகுபடி மேற்கொண்டு விவசாயக்கடன் கூட்டுறவு சங்கத்திலோ அல்லது தேசியமயமாக்கப்பட்ட வங்கிகளிலோ



கடன்பெறும் விவசாயிகள் அறிவிக்கை செய்யப்பட்ட நெற் பயிருக்கு காப்பீடு செய்ய தொடக்கவேளாண்மை கூட்டுறவு கடன் சங்கங்களிலோ, தேசியமயமாக்கப்பட்ட வங்கிகளிலோ, கடன் பெறாத விவசாயிகள் பொது சேவைமையங்களிலோ தேசிய பயிர் காப்பீட்டு இணையத்தளத்தில் விவசாயிகள் கார்னரில் (www.pmfby.gov.in) உள்ளநேரிடையாகவோ நிர்ணயிக்கப்பட்ட காலக்கெடுவுக்குள் விருப்பத்தின்பேரில் காப்பீடு செய்யலாம்.

விவசாயிகள் இத்திட்டத்தின் கீழ் பதிவு செய்யும் போது முன்மொழிவு விண்ணப்பம், பதிவு விண்ணப்பம், கிராம நிர்வாக அலுவலர் வழங்கும் நடப்பு பசலிக்கான அடங்கல், இஅடங்கல் சான்றிதழ், வங்கிக்கணக்கு புத்தகத்தின் முதல் பக்க நகல், ஆதார் அட்டை நகல் ஆகியவற்றை இணைத்து கட்டணத் தொகையை செலுத்திய பின் அதற்கான ரசீதையும் பெற்றுக் கொள்ள வேண்டும். மேலும், பணம் செலுத்தும் போது தாங்கள் சாகுபடி செய்துள்ள வருவாய் கிராமம் மற்றும் புல எண் போன்ற விவரங்கள் சரியாக பதிவேற்றம் செய்யப்பட்டுள்ளதா என்பதையும் சரி பார்த்துக் கொள்ள வேண்டும்எனமாவட்ட ஆட்சித் தலைவர் மரு. இரா.வைத்திநாதன், இ.ஆ.ப அவர்கள் தெரிவித்துள்ளார்.

## "தினப்பயணிகளே கவலை வேண்டாம்... உங்கள் குரலாக நான் நிற்கிறேன்!" ரயில்வே அதிகாரிகளை சந்தித்த மோகன் கிருஷ்ணா

### நாளை மாலை 4.30 மணிக்கு பங்காருபேட்டை ரயில் நிலையத்தில் முக்கிய ஆலோசனை

பங்காருபேட்டை: கே.ஜி.எஃப் பகுதியில் இருந்து தினமும் ஆயிரக் கணக்கானோர் வேலை உள்ளிட்ட பல்வேறு தேவைகளுக்காக பெங்களூருவுக்கு ரயில் மூலம் சென்று, நாள் முழுவதும் பணிகளை முடித்துவிட்டு மீண்டும் தங்களது வீடுகளுக்கு திரும்பி வருகின்றனர். அதிகாலை முதல் இரவு வரை தொடரும் இந்த தினசரி ரயில் பயணத்தில் பல்வேறு சிரமங்களை எதிர்கொண்டு வருவதாக பயணிகள் தெரிவித்து வருகின்றனர். குறிப்பாக ரயில்களின் நேரம், இணைப்பு ரயில் சேவை மற்றும் மாலை நேரத்தில் பெங்களூருவில் இருந்து கே.ஜி.எஃப் பகுதிகளுக்கு திரும்பும் பயணிகளுக்கு ஏற்படும் சிரமங்கள் குறித்து பயணிகள் தொடர்ந்து கவலை தெரிவித்து வருகின்றனர். இந்த நிலையில், தினசரி பயணிகளின் பிரச்சனைகளுக்கு தீர்வு காணும் நோக்கில் ஆர்.கே. அறக்கட்டளை தலைவர் வி. மோகன் கிருஷ்ணா இன்று பங்காருபேட்டை ரயில் நிலையத்திற்கு சென்று ரயில்வே அதிகாரிகளை சந்தித்து, கே.ஜி.எஃப் தினசரி பயணிகள் எதிர்கொள்ளும் பிரச்சனைகள் குறித்து எடுத்துரைத்தார். தினமும் வேலைக்காக பெங்களூருவுக்கு சென்று திரும்பும் தொழிலாளர்கள், ஊழியர்கள், பெண்கள் மற்றும் பொது மக்கள் எதிர்கொள்ளும் சிரமங்களை அதிகாரிகளின் கவனத்திற்கு கொண்டு சென்றதாக மோகன் கிருஷ்ணா தெரிவித்தார்.

இதையடுத்து, தினசரி பயணிகளின் பிரச்சனைகள் குறித்து நாளை மாலை 4.30 மணிக்கு நேரடியாக வந்து பேசலாம் என ரயில்வே அதிகாரிகள் தெரிவித்ததாக அவர் கூறினார். இதனைத் தொடர்ந்து, நாளை மாலை 4.30 மணிக்கு பங்காருபேட்டை ரயில் நிலையத்தில் தினசரி பயணிகள் அனைவரும் ஒன்றுதிரண்டு வந்து தங்களது பிரச்சனைகள் மற்றும் கோரிக்கைகளை அதிகாரிகளிடம் நேரடியாக எடுத்துரைக்க வேண்டும் என மோகன் கிருஷ்ணா அழைப்பு விடுத்துள்ளார். இதுகுறித்து அவர் கூறுகையில், "என் அன்பான கே.ஜி.எஃப் தினசரி பயணிகளே, நீங்கள் யாரும் கவலைப்பட வேண்டாம். உங்களுக்காகவே நான் இருக்கிறேன். தினமும் குடும்பத்திற்காக அதிகாலை முதல் இரவு வரை பயணம் செய்து உழைக்கும் தாய்மார்கள், சகோதரிகள், சகோதரர்கள் மற்றும் அனைத்து தினசரி பயணிகளும் எதிர்கொள்ளும் சிரமங்களை நேரில் பார்க்கும்போது வேதனை ஏற்படுகிறது.

பயணம் என்பது பொதுமக்களுக்கு சிரமமாக இல்லாமல் பாதுகாப்பாகவும் வசதியாகவும் இருக்க வேண்டும். உங்கள் பிரச்சனை எனது பிரச்சனை.

அதனால் நாளை மாலை 4.30 மணிக்கு நாம் அனைவரும் ஒன்றாக பங்காருபேட்டை ரயில் நிலையத்திற்கு சென்று நமது பிரச்சனைகளைரயில்வே அதிகாரிகளிடம் அமைதியான முறையில் எடுத்துரைப்போம்" என தெரிவித்துள்ளார். மேலும், தினசரி பயணிகள் தங்களது அனுபவங்கள், தேவைகள் மற்றும் ஆலோசனைகளை நேரடியாக தெரிவிக்க வேண்டும் என்றும், பயணிகளின் கருத்துகளை அடிப்படையாகக் கொண்டு அவர்களுக்கு பயனளிக்கும் வகையில் தொடர்ந்து நடவடிக்கை எடுக்கத் தயாராக இருப்பதாகவும் மோகன் கிருஷ்ணா தெரிவித்துள்ளார். "நமது ஒற்றுமையே நமது பலம். தினசரி பயணிகளின் பிரச்சனைகளுக்கு உரிய தீர்வு கிடைக்க வேண்டும் என்பதற்காக சட்டரீதியான மற்றும் அமைதியான வழிகளில் தொடர்ந்து குரல் கொடுப்பேன். நமது தாய்மார்கள், சகோதரிகள், சகோதரர்கள் பாதுகாப்பாகவும் நிம்மதியாகவும் பயணம் செய்து வீடு திரும்ப வேண்டும் என்பதே எனது விருப்பம்" என்றும் அவர் தெரிவித்துள்ளார். இதனிடையே, நாளை மாலை 4.30 மணிக்கு பங்காருபேட்டை ரயில் நிலையத்தில் நடைபெறும் ஆலோசனையில் தினசரி பயணிகள் கலந்து கொண்டு தங்களது பிரச்சனைகளை நேரடியாக அதிகாரிகளிடம் தெரிவிக்க உள்ளதாக கூறப்படுகிறது. கே.ஜி.எஃப் பகுதியில் இருந்து பெங்களூருவுக்கு தினமும் பயணம் செய்து வரும் ஆயிரக்கணக்கான பயணிகளின் நீண்டகால சிரமங்களுக்கு ரயில்வே நிர்வாகம் உரிய தீர்வை ஏற்படுத்த வேண்டும் என்பதே பயணிகளின் எதிர்பார்ப்பாக உள்ளது. நாளை மாலை 4.30 மணி, பங்காருபேட்டை ரயில் நிலையம் –

தினசரி பயணிகளின் பிரச்சனைகள் குறித்து ரயில்வே அதிகாரிகளுடன் முக்கிய ஆலோசனை நடைபெற உள்ளது.





தமிழ்நாடு பிராமண சமுதாய சார்பாக 04.10.2026. ஞாயிற்றுக்கிழமை தமிழ்நாடு முழுவதும் பிராமண சமுதாயத்தைச் சேர்ந்தவர்கள் ஆங்காங்கே வருண பகவானே ஜபமிட்டு ஓமங்கள் வாழ்த்தி மலை வேண்டி பூஜைகள் நடைபெற்றது அதேபோல் திண்டுக்கல் மாவட்டம் பழனியில் சண்முக நதி அருகில் உள்ள வன்னி விநாயகர் கோவில் இந்த சிறப்பு யாகம் நடைபெற்றது பூஜைகளை ஏராளமான பிராமணர்களும் கு ரு க் கல் கலந்து கொண்டு இந்த ஓம நிகழ்ச்சியை சிறப்பாக நடத்திக் கொடுத்தனர் இந்த வருண பகவான் ஜெப ஓமத்தினால் கூடிய விரைவில் மழை வரும் என இந்த ஓமத்தில் கலந்து கொண்டவர்கள் தெரிவித்தனர் இதனால் பொதுமக்கள் மிகவும் சந்தோஷமடைந்தன



திண்டுக்கல் மாநகர் வடக்கு ரத வீதி டாஸ்மாக் கடை எண் 3120 பார் இல்லாத கடை மது பாட்டில் விற்பனை மட்டும் உள்ளது அப்பகுதி வியாபாரிகள் கடைகளுக்கு முன்பு அப்பகுதி குடியிருப்போர் வீடுகளுக்கு முன்பு மது குடிக்கும் இடமாக மாறிவிட்டது வியாபாரிகளுக்கும் மது அருந்துபவர்களுக்கும் பிரச்சினைகள் ஏற்படுகிறது குடியிருப்போர் வீடுகள் முன்பு பிரச்சினைகள் ஏற்படுகிறது பிளாஸ்டிக் கப் பகுதி முழுவதும் விற்பனை உள்ளதால் திறந்த வெளியில் மது குடிக்கும் இடமாக மாநகர் பகுதி மாநகராட்சி நிர்வாகம் நடவடிக்கை தேவை

டாஸ்மாக் நிர்வாகம் மனசாட்சி இல்லாமல் விற்பனை மட்டும் செய்து வருகின்றனர் உயர்திரு மாவட்ட ஆட்சியர் அவர்கள் எஸ் பி அவர்கள் டிஎஸ்பி அவர்கள் மாநகராட்சி ஆணையர் அவர்கள் உதவிட வேண்டும் டாஸ்மார்க் DM அவர்கள் மதுவிலக்கு டிஎஸ்பி அவர்கள் மதுவிலக்கு இன்ஸ்பெக்டர் அவர்கள் உதவிட வேண்டும் வடக்கு தெற்கு காவல் நிலையம் ஆய்வாளர் அவர்கள் உதவிட வேண்டும் தமிழ்நாடு வணிகர் சங்கம் கோரிக்கை

## நாரவாரிக்குப்பம் (செங்குன்றம்) தேர்வுநிலை பேரூராட்சி புனரமைப்பு செய்யப்பட்ட அறிஞர் அண்ண பேருந்து நிலையம் திறப்பு விழா

### அரசு நிகழ்ச்சியில் செய்தி சேகரிக்க முடியாமல் செய்தியாளர்கள் திணறல்

திருவள்ளூர் மாவட்டம் மாதவரம் தொகுதி நாரவாரிக்குப்பம் (செங்குன்றம்) தேர்வுநிலை பேரூராட்சியில் நகராட்சி நிர்வாகம் மற்றும் குடிநீர் வழங்கல் துறை சார்பில் ரூ. 2 கோடியே 71 இலட்சத்து 50 ஆயிரம், பொது நிதி ரூ. 97 இலட்சத்து 50 ஆயிரம் மொத்த ரூ. 3 கோடியே 69 இலட்சத்தில் புனரமைப்பு செய்யப்பட்ட அறிஞர் அண்ண பேருந்து நிலையம் திறப்பு விழா நடைபெற்றது.

மாதவரம் சட்டமன்ற உறுப்பினரும் தவெக திருவள்ளூர் ன்மேற்கு மாவட்டசெயலாளருமான எம்.எல். விஜய் பிரபு சிறப்பு அழைப்பாளராகக் கலந்து கொண்டு புனரமைப்பு செய்யப்பட்ட அறிஞர் அண்ணா பேருந்து நிலையத்தை திறந்து வைத்தும், புதிய பேருந்துகளை கொடியசைத்து துவக்கி வைத்தும், பொதுமக்களுக்கு இனிப்பு, அறுசுவை அன்னதானத்தை வழங்கினார்.

முன்னதாக அறிஞர் அண்ணா, அம்பேத்கர் சிலைக்கு மாலை அணிவித்து மரியாதை செய்தார்.

திருவள்ளூர் மாவட்ட பேரூராட்சிகளின் உதவி இயக்குநர் விஜயலட்சுமி, செங்குன்றம் பேரூராட்சி செயல் அலுவலர் பாஸ்கரன் ஆகியோர் முன்னிலை வகித்தனர். இதில் செங்குன்றம் பேரூராட்சி கவுன்சிலர்கள் லீலாவதி சாந்தகுமார், கோமதி பாஸ்கர், தவெக செங்குன்றம் நகரச் செயலாளர் கே.விஜி, இணைச் செயலாளர் பைரவா வினோத், பொருளாளர் எம்.சுரேஷ், துணைச் செயலாளர்கள் எம்.எம். மணிகண்டன், ஜெ.காதர் உள்ளிட்ட ஒன்றியச் செயலாளர்கள், தவெக நிர்வாகிகள், உறுப்பினர்கள் திரளாக கலந்து கொண்டு சிறப்பித்தனர்.

சட்டமன்ற உறுப்பினர் கலந்து கொண்ட அரசு நிகழ்ச்சியில் தவெக கட்சி நிர்வாகிகள், உறுப்பினர்கள் அவரை சூழ்ந்து கொண்டு பத்திரிகையாளர்களை செய்தி சேகரிக்க விடாமலும், பொதுமக்கள் சட்டமன்ற உறுப்பினரை சந்திக்க விடாமலும் நடந்து கொண்ட விதம் வருத்தமடையச் செய்தது குறிப்பிடத்தக்கது. இனிவரும் காலங்களில் இது போன்று கட்சி நிர்வாகிகள் நடந்து கொள்ளக் கூடாது என்று சட்டமன்ற உறுப்பினர் அறிவுறுத்த வேண்டுமென்றும் பொதுமக்கள் சமூக ஆர்வலர்கள் கோரிக்கை விடுத்துள்ளனர்.

இந்நிகழ்வில் செங்குன்றம் பேரூராட்சி தலைவர், துணைத்தலைவர், கவுன்சிலர்கள் பெயர்கள் திறப்பு விழா கல்வெட்டில் பதிக்கப்படாதது பொதுமக்களிடையே அதிருப்தியை ஏற்படுத்தி உள்ளது.





## பாரம்பரிய வழிபாட்டு உரிமையை பாதுகாக்க வேண்டும்:

## ஸ்ரீ சீனிவாச பெருமாள் மலைக்கோயிலில் சிறப்பு பூஜை நடத்த அனுமதி மற்றும் காவல்துறை பாதுகாப்பு கோரி மாவட்ட ஆட்சியரிடம் மனு

திருப்பத்தூர் மாவட்டம், நாட்றம்பள்ளி வட்டம் அக்ரஹாரம் பகுதியில் அமைந்துள்ள ஸ்ரீ சீனிவாச பெருமாள் மலைக்கோயிலில் தங்களது பாரம்பரிய வழிபாட்டு உரிமையை பாதுகாக்க வேண்டும் எனக் கோரி, அப்பகுதியைச் சேர்ந்த குலதெய்வ வழிபாட்டாளர்கள் மற்றும் பக்தர்கள் மாவட்ட ஆட்சியரிடம் புகார் மனு அளித்துள்ளனர்.

அந்தமனுவில், கோயில் கட்டுமானப் பணிகள் சுமார் 20 ஆண்டுகளாக நடைபெற்று,

தற்போது கும்பாபிஷேகம் நடைபெற்றுள்ளதாகவும், கோயில் பணிகளுக்காக பக்தர்கள் மற்றும் குலதெய்வ வழிபாட்டாளர்கள் பல லட்சம் ரூபாய் நிதியுதவி வழங்கியுள்ளதாகவும் ஆனால், நிதி வசூல் மற்றும் செலவுகள் தொடர்பான வரவு–செலவு கணக்குகள் பொதுமக்களின் பார்வைக்கு வெளிப்படையாக வைக்கப்படவில்லை எனவும் அந்த மனுவில் தெரிவிக்கப்பட்டது.

மேலும், கோயில் நிர்வாகம் தொடர்பாக விளக்கம் கேட்ட குலதெய்வ வழிபாட்டாளர்கள் மற்றும் கைங்கரிய நண்பர்களுக்கு கடந்த ஓராண்டாக கோயிலுக்குள் சென்று வழிபாடு மற்றும் கைங்கரியம் செய்ய அனுமதி மறுக்கப்பட்டதாகவும்

கடந்த மாதம் கோயிலுக்கு சென்றபோது ஏற்பட்ட பிரச்சினையால் பதற்றமான சூழல் உருவானதாகவும், காவல்துறையினர் தலையிட்டு பின்னர் கோயில் நுழைவாயில் திறக்கப்பட்டதாகவும் அவர்கள் குறிப்பிட்டுள்ளனர்.

இதேபோன்ற பிரச்சினை கடந்த ஆண்டும் ஏற்பட்டதாகவும், பல முறை புகார் அளித்தும் இதுவரை நிரந்தரத் தீர்வு கிடைக்கவில்லை என்றும் தெரிவித்துள்ளனர்.

சிறப்பு பூஜைக்கு அனுமதிக்க வரும் 10ஆம் தேதி மற்றும் 17 ஆம் தேதி ஆகிய தேதிகளில் ஸ்ரீ சீனிவாச பெருமாள் மலைக்கோயிலில் அமைதியான முறையில் சிறப்பு பூஜை மற்றும் கைங்கரியம் மேற்கொள்ள உரிய அனுமதி வழங்குவதுடன், தேவையான காவல்துறை பாதுகாப்பும் வழங்க வேண்டும் என மாவட்ட ஆட்சியரிடம் கோரிக்கை விடுத்துள்ளனர்.

மேலும், கோயில் கட்டுமானப் பணிகள், நிதி வசூல், வரவு–செலவு கணக்குகள் மற்றும் நிர்வாக நடவடிக்கைகள் குறித்து உரிய அதிகாரிகள் மூலம் விசாரணை நடத்தி, உண்மை நிலையை வெளிக்கொண்டு வந்து சட்டப்படி நடவடிக்கை எடுக்க வேண்டும் என்றும் மனுவில் வலியுறுத்தியுள்ளனர்..



## வீடுகளை இடிக்கும் அச்சம் முதல் அடிப்படை வசதிகள் வரை: திருவண்ணாமலையில் 770 மக்கள் குறைகள்



திருவண்ணாமலை மாவட்டத்தில் வீட்டுமனைப் பட்டா, முதியோர் உதவித் தொகை, சாலை வசதி உள்ளிட்ட பல்வேறு கோரிக்கைகள் தொடர்பாக பொதுமக்கள் அளித்த 770 மனுக்களை மாவட்ட ஆட்சியர் வந்தனா கார்க் பெற்றுக் கொண்டு, அவற்றின் மீது உரியநடவடிக்கைஎடுக்க சம்பந்தப்பட்ட துறை அலுவல ர்களுக்கு அறிவுறுத்தினார்.

திருவண்ணாமலை மாவட்ட ஆட்சியர் அலுவலக வளாகத்தில் மக்கள் குறைதீர்வு நாள் கூட்டம் மாவட்ட ஆட்சியர் வந்தனா கார்க் தலைமையில் நடைபெற்றது.

மாவட்ட வருவாய் அலுவலர் அ. சிவசுப்பிரமணியன் மற்றும் பல்வேறு துறை அலுவலர்கள் கலந்து கொண்டனர்.

கூட்டத்தில் மாவட்டத்தின் பல்வேறு பகுதிகளில் இருந்து வந்த பொதுமக்கள், முதியோர் உதவித்தொகை, வீட்டுமனைப் பட்டா, சாதிச் சான்று, சாலை வசதி, அரசு வீடு வழங்கும் திட்டத்தில் வீடு ஒதுக்கீடு உள்ளிட்ட பல்வேறு கோரிக்கைகளை வலியுறுத்தி 770 மனுக்களை அளித்தனர். மனுக்களைப் பெற்றுக்கொண்ட ஆட்சியர், அவற்றை உரிய முறையில் பரிசீலித்து விரைந்து நடவடிக்கை எடுக்க சம்பந்தப்பட்ட துறை அலுவலர்களுக்கு அறிவுறுத்தினார்.

தொடர்ந்து, 3 மாற்றுத்திறனாளிகளுக்கு ரூ.38,716 மதிப்பிலான நலத்திட்ட உதவிகளையும், பயனாளிகளுக்கு முதலமைச்சரின் விரிவான மருத்துவக் காப்பீட்டுத் திட்ட அட்டைகளையும் மாவட்ட ஆட்சியர் வழங்கினார்.

இதற்கிடையே, திருவண்ணாமலை நொச்சிமலை பகுதியைச் சேர்ந்த 20க்கும் மேற்பட்ட பொதுமக்கள், தங்களது வீடுகள் ஆக்கிரமிப்புப் பகுதியில் உள்ளதாகக் கூறி, அவற்றை இடிப்பதற்கான முயற்சிகள் மேற்கொள்ளப்பட்டு வருவதாக தெரிவித்தனர்.

இது தொடர்பான வழக்கு சென்னை உயர் நீதிமன்றத்தில் நிலுவையில் உள்ளதால், வழக்கு முடியும் வரை வீடுகளை இடிக்காமல் கால அவகாசம் வழங்க வேண்டும் எனக் கோரி மாவட்ட ஆட்சியரிடம் மனு அளித்தனர். மேலும், 108 ஆம்புலன்ஸ் ஊழியர் சங்கத்தினர் தங்களது 11 அம்சக் கோரிக்கைகளை நிறைவேற்ற வலியுறுத்தி, மாநில அளவில் வேலை நிறுத்தப் போராட்டம் நடத்த உள்ளதாக மாவட்ட ஆட்சியரிடம் மனு அளித்தனர்.

இதுகுறித்து சங்கத்தினர் கூறுகையில், 11 அம்சக் கோரிக்கைகளை நிறைவேற்ற வலியுறுத்தி முதற்கட்டமாக அக்டோபர் 14ம் தேதி மதுரையில் பட்டினிப் போராட்டம் நடத்த உள்ளதாகவும், அதன்பிறகும் கோரிக்கைகள் நிறைவே ற்றப்படாவிட்டால் நவம்பர் 3ம் தேதி முதல் மாநிலம் தழுவிய வேலைநிறுத்தப் போராட்டத்தில் ஈடுபட உள்ளதாகவும் தெரிவித்தனர்.

இதனிடையே, செய்யாறு சார் ஆட்சியர் அலுவலகத்தில் நடைபெற்ற மக்கள் குறைதீர்வு நாள் கூட்டத்தில் 161 மனுக்களும், ஆரணி வருவாய் கோட்டாட்சியர் அலுவலகத்தில் நடைபெற்ற மக்கள் குறைதீர்வு நாள் கூட்டத்தில் 71 மனுக்களும் பெறப்பட்டன. இந்த மனுக்கள் மீதும் உரிய நடவடிக்கை மேற்கொள்ள சம்பந்தப்பட்ட துறை அலுவலர்களுக்கு அறிவுறுத்தப்பட்டுள்ளது.

# கைவினைக் கலைஞர்களின் வாழ்வாதாரத்தை உயர்த்தும் பூம்புகார் கண்காட்சி; திருவண்ணாமலையில் அக்.9 முதல் 18 வரை கைவினை, கைத்தறி பொருட்கள் விற்பனை

## அனைத்து பொருட்களுக்கும் 10% சிறப்புத் தள்ளுபடி

தமிழ்நாடு கைத்திறத் தொழில்கள் வளர்ச்சிக் கழகம் சார்பில், திருவண்ணாமலை திருவூடல் தெருவில் உள்ள வன்னியர் திருமண மஹாலில் “அனைத்து கைவினை, கைத்தறி பொருட்கள் கண்காட்சி மற்றும் விற்பனை” வரும் 9ந்தேதி முதல் 18 ந்தேதி வரை நடைபெறுகிறது. இதனை பொதுமக்கள் பயன்படுத்திக் கொண்டு கைவினைக் கலைஞர்களின் வாழ்வாதாரத்தை மேம்படுத்த உதவ வேண்டும் என்று மாவட்ட ஆட்சியர் வந்தனா கார்க் தெரிவித்துள்ளார்.



தமிழ்நாடு அரசின் நிறுவனமான தமிழ்நாடு கைத்திறத் தொழில்கள் வளர்ச்சிக் கழகம், “பூம்புகார்” என்ற பெயரில் கைவினைத் துறையில் சிறப்பாக செயல்பட்டு வருகிறது. தமிழகத்தின் பாரம்பரியம், கலாச்சாரம் மற்றும் பண்பாட்டை கைவினைக் கலைகள் மூலம் பாதுகாப்பதுடன், கைவினைக் கலைஞர்களின் வாழ்வாதாரத்தை மேம்படுத்தவும், அவர்களை ஊக்குவிக்க பல்வேறு விருதுகளை வழங்கவும், கைவினைக் கலைகளை அடுத்த தலைமுறைக்கு கொண்டு செல்லவும் நடவடிக்கைகள் மேற்கொண்டு வருகிறது. அதன் தொடர்ச்சியாக நடைபெறும் இந்தக் கண்காட்சியில் 10 க்கும் மேற்பட்ட கைவினைக் கலைஞர்கள், தங்களது கைவண்ணத்தில் உருவாக்கிய பல்வேறு கைவினைப் பொருட்களை காட்சிப்படுத்தி விற்பனை செய்ய உள்ளனர்.

கண்காட்சியில் பித்தளை விளக்குகள், கைவினைப் பரிசுப் பொருட்கள், சுடிதார்கள், புடைவைகள், நைட்டிகள், ஐம்பொன் நகைகள், குழந்தைகளுக்கான மரப்பொம்மைகள், பஞ்சலோகச் சிலைகள், பித்தளைச் சிலைகள், மரச்சிற்பங்கள், கலைப் பொருட்கள், பெண்களுக்கான பைகள், பூஜைப் பொருட்கள், அகர்வத்தி மாலைகள், செம்புப் பொருட்கள், கோவில் அலங்காரப் பொருட்கள் உள்ளிட்ட பல்வேறு வகையான பொருட்கள் விற்பனைக்கு வைக்கப்பட உள்ளன.

இக்கண்காட்சியில் ரூ.50 முதல் ரூ.1 லட்சத்து 40 ஆயிரம் வரையிலான பல்வேறு விலைகளில் கைவினைப் பொருட்கள் இடம்பெறுகின்றன. மேலும், அனைத்து பொருட்களுக்கும் 10 சதவீதம் சிறப்புத் தள்ளுபடி வழங்கப்படுகிறது.

எனவே, பொதுமக்கள் அனைவரும் வரும் 9ந்தேதி முதல் 18ந்தேதி வரை நடைபெறும் இந்தக் கண்காட்சியில் பங்கேற்று, பாரம்பரிய கைவினைப் பொருட்களை வாங்குவதுடன்,

கைவினைக் கலைஞர்களின் வாழ்வாதாரத்தை உயர்த்துவதற்கு ஆதரவு அளிக்க வேண்டும் என்று மாவட்ட ஆட்சியர் வந்தனா கார்க் கேட்டுக் கொண்டுள்ளார்.

# ஆற்காட்டில் நேசம் அறக்கட்டளை சார்பில் முதியோர் தின விழா

இராணிப்பேட்டை மாவட்டம் ஆற்காட்டில் நேசம் அறக்கட்டளை சார்பாக முதியோர் தின விழா விளாப்பக்கம் முதியோர் இல்லத்தில் மிகச் சிறப்பாக நடைபெற்றது.



அறக்கட்டளை தலைவர் திரு சையத் பாரூக் தலைமை தாங்கினார்

மாவட்ட வணிகர் சங்கங்களின் பேரமைப்பு தலைவர் திரு பொன் கு.சரவணன் அவர்கள் முன்னிலை வகித்தார் சிறப்பு அழைப்பாளராக ஆற்காடு சட்டமன்ற உறுப்பினர் திரு S.M.சுகுமார் MLA, அவர்கள் கலந்து கொண்டு சிறப்பித்தார். கேக் வெட்டி (senior citizens) முதியவர்களுக்கு ஊட்டி மகிழ்ந்தார். இந்த சிறப்பான நிகழ்வில் மாவட்ட மாணவர் அணி செயலாளர் M.C.விஜய் ஆனந்த், பேரூராட்சி அதிமுக துணை செயலாளர் மணவாளன், மாவட்ட தகவல் தொழில்நுட்ப பிரிவு தலைவர் ஆர்.செல்வராஜ், முன்னாள் பேரூராட்சி கழக செயலாளர் கமலஹாசன், நகர இளைஞரணி செயலாளர் சந்திரன், பேரூராட்சி மன்ற உறுப்பினர் மொசைக் ரமேஷ், திமிரி நகர பொருளாளர் ஜெயவேல், வட்ட செயலாளர் மதிவாணன்,

ராஜேஷ் மாவட்ட தகவல் தொழில்நுட்ப பிரிவு இணை செயலாளர் கண்ணன் துணை செயலாளர் அஜித் குமார் உட்பட கழக நிர்வாகிகள் பலர் கலந்து கொண்டனர்

## திண்டுக்கல்லில் மதுபோதை மறுவாழ்வு மையத்தில் மிரட்டி

# ரூ.5 லட்சம் பணம் பறிக்க முயற்சி செய்த செய்தியாளர் உட்பட 2 பேர் கைது

திண்டுக்கல், R.M.காலனி பகுதியில் செயல்பட்டு வரும் ரத்தினம் என்பவருக்கு சொந்தமான மது போதை மறுவாழ்வு மையத்தில் சிகிச்சைக்கு வரும் நபர்களை அடிப்பதாகவும் முறைகேடு நடைபெறுவதாகவும் கூறி இது குறித்து மது போதை மறுவாழ்வு மையத்திற்கு எதிராக செய்தி வெளியிடுவேன் என்று திண்டுக்கல் மேற்கு ஆரோக்கியமாதா தெரு பகுதியை சேர்ந்த அருள்ராஜ் மகன் புஷ்பகிரிதரன்(36), ஞானஸ்டாலின் மகன் மனோஜ்(27) ஆகியோர் மிரட்டி அவ்வாறு வெளியிடாமல்





இருக்க வேண்டும் என்றால் ரூ.5 லட்சம் பணம் தர வேண்டும் என்று கூறியதாக நகர் மேற்கு காவல் நிலையத்தில் ரத்தினம் புகார் அளித்தார்.

இதுகுறித்து நகர் DSP. கார்த்திக் உத்தரவின் பேரில் நகர் மேற்கு காவல் நிலைய ஆய்வாளர் மீனாட்சி சார்பு ஆய்வாளர் நாராயணன் மற்றும் காவலர்கள் சிசிடிவி பதிவுகளை ஆய்வு செய்து விசாரணை மேற்கொண்டு மேற்படி சம்பவத்தில் ஈடுபட்ட புஷ்பகிரிதரன், மனோஜ் ஆகிய 2 பேரை கைது செய்தனர்



## திண்டுக்கல்லில்

# பேரூராட்சி மற்றும் காவல்துறை சார்பில் சாலையோர ஆக்கிரமிப்புகள் அகற்றப்பட்ட நிலையில், கட்டிடக் கழிவுகள், மண் சாக்கடை கால்வாய்களில் விழுந்து கழிவுநீர் செல்ல முடியாத நிலை

திண்டுக்கல் மாவட்டம், பழனி அருகே நெய்க்காரப்பட்டியில் இருந்து பெருமாள்புதூர் செல்லும் கோட்டமந்தியம் சாலையில் சாக்கடை நீர் சாலையில் தேங்கியதால் வாகன ஓட்டிகள், பொதுமக்கள் மற்றும் பள்ளி மாணவர்கள் கடும் சிரமத்திற்கு உள்ளாகினர்.

கடந்த ஒரு வாரத்திற்கு முன்பு பேரூராட்சி மற்றும் காவல்துறை சார்பில் சாலையோர ஆக்கிரமிப்புகள் அகற்றப்பட்ட நிலையில், கட்டிடக் கழிவுகள் மற்றும் மண் சாக்கடை கால்வாய்களில் விழுந்து கழிவுநீர் செல்ல முடியாத நிலை ஏற்பட்டுள்ளதாக பொதுமக்கள் குற்றம்சாட்டுகின்றனர்.

மேலும், சாலையின் இருபுறங்களிலும் இருசக்கர வாகனங்கள் முறையின்றி நிறுத்தப்படுவதால் போக்குவரத்துக்கும் இடையூறு ஏற்படுவதாக கூறப்படுகிறது. சாக்கடை கால்வாய்களை உடனடியாக தூர்வாரி சீரமைப்பதுடன், சாலையோர வாகன நிறுத்தத்தை கட்டுப்படுத்தி போக்குவரத்துக்கு இடையூறு ஏற்படாத வகையில் நடவடிக்கை எடுக்க வேண்டும் என பொதுமக்கள் கோரிக்கை விடுத்துள்ளனர்.

# இராணிப்பேட்டை மாவட்ட ஆட்சியரிடம் ஆற்காடு MLA எஸ் எம் சுகுமார் மனு



ஆற்காடு சட்டமன்ற உறுப்பினர் திரு S.M.சுகுமார் MLA, அவர்கள் ஆற்காடு தொகுதியில் கட்டி முடிக்கப்பட்டு திறக்கப்படாமல் உள்ள அரசு கட்டிடங்களை திறந்து மக்கள் பயன்பாட்டுக்கு கொண்டுவர வேண்டும் மற்றும் ஆற்காடு தொகுதி முக்கிய தேவைகள் அடங்கிய கோரிக்கை மனுக்களை ராணிப்பேட்டை மாவட்ட ஆட்சித்தலைவர் திருமதி ந. ப்ரியா ரவிச்சந்திரன் IAS அவர்களை நேரில் சந்தித்து வழங்கினார்.

# திண்டுக்கல் மாவட்டத்தில் துணை வட்டாட்சியர்கள் அதிரடி பணி மாறுதல்; மாவட்ட ஆட்சியர் உத்தரவு

திண்டுக்கல் மாவட்டத்தில் பணியாற்றி வரும் துணை வட்டாட்சியர்கள் 11 பேருக்கு பணி மாறுதல் மற்றும் கூடுதல் பொறுப்பு வழங்கி மாவட்ட ஆட்சியர் உத்தரவிட்டுள்ளார். இது தொடர்பான உத்தரவு விவரம் வருமாறு:

5. பா.மைதிலி, முன்னாள் மண்டல துணை வட்டாட்சியர்1,பழனி(காவல்துறைபயிற்சிமுடித்துதிரும்பியவர்) தலைமையிடத்து துணை வட்டாட்சியர், வேடசந்தூர்.

6. க.பொன்னுச்சாமி, தலைமையிடத்து துணை வட்டாட்சியர், வேடசந்தூர் வட்ட வழங்கல் அலுவலர், திண்டுக்கல் மேற்கு. (நீதித்துறை பயிற்சிக்கு செல்லும் ம.தங்கமணிக்கு பதிலாக)

7. மா.முத்துவிநாயகம், முன்னாள் மண்டல துணை வட்டாட்சியர், திண்டுக்கல் கிழக்கு (காவல் துறை பயிற்சி முடித்து திரும்பியவர்) தலைமையிடத்து துணை வட்டாட்சியர், திண்டுக்கல் மேற்கு.

8. உ.செண்பகவள்ளி, முன்னாள் தலைமையிடத்து துணை வட்டாட்சியர், நிலக்கோட்டை (மருத்துவ விடுப்பு முடிந்து திரும்பியவர்) தலைமை உதவியாளர், மாவட்ட வழங்கல் மற்றும் நுகர்வோர் பாதுகாப்பு அலுவலகம், திண்டுக்கல்.9. பெ.கு.சந்திரலேகா, தலைமை உதவியாளர், மாவட்ட வழங்கல் அலுவலகம், திண்டுக்கல் தலைமையிடத்து துணை வட்டாட்சியர், ஆத்தூர்.

10. கு.செல்வி, வட்ட வழங்கல் அலுவலர், நிலக்கோட்டை மண்டல துணை வட்டாட்சியர்2, நிலக்கோட்டை.

11. த.முத்தமிழ்செல்வன், தனித்துணை வட்டாட்சியர் (வரைவேற்பு), பழனி வட்ட வழங்கல் அலுவலர், நிலக்கோட்டை.

12. மு.அமுதா, தலைமை உதவியாளர் / துணை வட்டாட்சியர், கலைஞர் மகளிர் உரிமைத் தொகை, கொடைக்கானல் தலைமை உதவியாளர் (எப்பிரிவு), மாவட்ட ஆட்சியர் அலுவலகம், திண்டுக்கல் (காலியாக உள்ள பணியிடத்தில்).

13. சு.பிரபுசிவசங்கர், தனித்துணை வட்டாட்சியர் (தேர்தல்), பழனி தனித்துணை வட்டாட்சியர் (வரைவேற்பு), பழனி (முழு கூடுதல் பொறுப்பு)

14. இரா.லட்சுமி, தலைமையிடத்து துணை வட்டாட்சியர், நத்தம் வட்ட வழங்கல் அலுவலர், நத்தம் (முழு கூடுதல் பொறுப்பு)

15. திரு.சந்திரசேகர், தலைமையிடத்து துணை வட்டாட்சியர், கொடைக்கானல் தலைமை உதவியாளர் / துணை வட்டாட்சியர், கலைஞர் மகளிர் உரிமைத் தொகை, கொடைக்கானல் (முழு கூடுதல் பொறுப்பு)

## மாவட்ட ஆட்சித்தலைவர்ந.ப்ரியா ரவிச்சந்திரன் தலைமையில்

# இராணிப்பேட்டை மாவட்ட ஆட்சியர் அலுவலகத்தில் திங்கள் கிழமை மக்கள் குறைதீர்வு நாள் கூட்டம்

இராணிப்பேட்டை மாவட்ட ஆட்சியர் அலுவலகத்தில் திங்கள் கிழமை மக்கள் குறைதீர்வு நாள் கூட்டம் மாவட்ட ஆட்சித் தலைவர்திருமதி.ந.ப்ரியா ரவிச்சந்திரன், இ.ஆ.ப., அவர்கள் தலைமையில் நடைபெற்றது.



இராணிப்பேட்டை மாவட்ட ஆட்சித் தலைவர் திருமதி.ந.ப்ரியா ரவிச்சந்திரன். இ.ஆ.ப., அவர்கள் இன்று (05.10.2026) மாவட்ட ஆட்சித்தலைவர் அலுவலக கூட்டரங்கில் நடைபெற்ற திங்கள் கிழமை மக்கள் குறைதீர்வு நாள் கூட்டத்தில் பொதுமக்களிடமிருந்தும், மாற்றுத்திறனாளிகளிடமிருந்தும் கோரிக்கை மனுக்களை பெற்றுக் கொண்டு குறைகளை கேட்டறிந்தார்கள்.

மக்கள் குறைதீர்வு நாள் கூட்டத்தில் பொதுமக்களிடமிருந்து வருவாய்த் துறை நிலப்பட்டா குறைகள், பட்டா மாறுதல், இலவச வீட்டு மனைப் பட்டா, முதியோர் உதவித்தொகை வேளாண்மைத்துறை, காவல்துறை. ஊரக வளர்ச்சித்துறை. நகராட்சி நிர்வாகங்கள், பேரூராட்சித்துறை. கூட்டுறவு, மின்சாரத்துறை சார்பான குறைகள், மாற்றுத்திறனாளிகள் நலத்துறை. கிராம பொதுப் பிரச்சனைகள், குடிநீர் வசதி, வேலை வாய்ப்பு வேண்டி மனுக்கள் மற்றும் பொதுநலன் குறித்த 463 மனுக்களை மாவட்ட ஆட்சித் தலைவர் அவர்கள் பொதுமக்கள் மற்றும் மாற்றுத்திறனாளிகளிடமிருந்து பெற்றுக்கொண்டு சம்பந்தப்பட்ட அலுவலர்களிடம் வழங்கி மனுக்கள்மீது உரிய விசாரணை மேற்கொண்டு தகுதியானதாக இருப்பின் உடனடியாக நடவடிக்கை எடுக்கவும் மற்றும் மனு நிராகரிப்பிற்கான காரணங்களையும் மனுதாரர்களுக்கு வழங்கிட வேண்டுமென அலுவலர்களுக்கு உத்தரவிட்டார்கள். துறை

இக்கூட்டத்தில் மாவட்ட வருவாய் அலுவலர் திரு.ந.சரவணன். சமூக பாதுகாப்பு திட்டம் தனித்துணை ஆட்சியர் திருமதி. கீதாலட்சுமி, நேர்முக உதவியாளர்கள் திருமதி.பாக்கியலட்சுமி (பொது) திருமதி.சுமதி (நிலம்), பிற்படுத்தப்பட்டோர் மற்றும் சிறுபான்மையினர் நல அலுவலர் திருமதி. மீனா, மாவட்ட வழங்கல் அலுவலர் திரு.பன்னீர் செல்வம், ஆதி திராவிடர் மற்றும் பழங்குடியினர் நல அலுவலர் திருமதி. பூமா, மாவட்ட மாற்றுத்திறனாளிகள் நல அலுவலர் திருமதி.செந்தில் குமாரி மற்றும் துறைச்சார்ந்த அலுவலர்கள் கலந்து கொண்டனர்.

# திண்டுக்கல்லில் போதை மாத்திரைகள், போதை டானிக், பட்டாகத்திகள், செல்போன்கள், டூவீலர் பறிமுதல் சிறுவன் உட்பட 3 பேர் கைது



திண்டுக்கல் மாவட்ட S.P.ஜெயக்குமார் அவர்களுக்கு கிடைத்த தகவலின்படி நகர் DSP.கார்த்திக் மேற்பார்வையில் நகர் தெற்கு காவல் நிலைய ஆய்வாளர் இளஞ்செழியன் தலைமையில் சார்பு ஆய்வாளர் ஜான்சன் மற்றும் காவலர்கள் தீவிர ரோந்து மற்றும் கண்காணிப்பு பணியில் ஈடுபட்டிருந்த போது

சந்தேகத்திற்கிடமாக வேடப்பட்டி மின் மயானம் எதிரே புதர் பகுதியில் பதுங்கியிருந்த 3 பேரை சுற்றி வளைத்து பிடித்து விசாரணை செய்த போது

அவர்கள் திண்டுக்கல், முருகபாவணத்தை சேர்ந்த கணேசன் மகன் பாண்டியராஜன் (19), நெட்டு தெரு பகுதியை சேர்ந்த மதுரைவீரன் மகன் விமல்(19) மற்றும் 17 வயது சிறுவன் என்பதும் அவர்கள் விற்பனைக்காக போதை டானிக்குகள், போதை மாத்திரைகள் பதுக்கி வைத்திருப்பது தெரியவந்ததை தொடர்ந்து போலீசார் 3 பேரையும் கைது செய்து அவர்களிடமிருந்து 11 போதை டானிக்குகள், 360 போதை மாத்திரைகள், 3 பட்டாகத்திகள், 2 செல்போன்கள், 1 டூவீலர் ஆகியவற்றை பறிமுதல் செய்து வழக்கு பதிவு செய்து விசாரணை மேற்கொண்டு வருகின்றர்

# தற்காலிக பட்டாசு கடைகளுக்கான உரிமம் - இணையவழி விண்ணப்பம்

வருகின்ற 2026ம் ஆண்டு தீபாவளி பண்டிகையை முன்னிட்டு ஆவடி மாநகர காவல் எல்லையில் தற்காலிக பட்டாசுகடைகளுக்கான உரிமம் பெற இணையத் தளம் மூலம் விண்ணப்பிக்கும் வழிமுறை நடைமுறை படுத்தப்பட்டுள்ளது. விண்ணப்பதாரர்கள் இணைய வழியில் https://www.tnesevai.tn.gov.in என்ற இணையத் தளம் மூலம் அக்டோபர் 31ஆம் தேதிக்குள் விண்ணப்பிக்குமாறு அறிவுறுத்தப்படுகிறார்கள்.

அக்டோபர் 31ஆம் தேதிக்கு மேல் பெறப்படும் விண்ணப்பங்கள் பரிசீலனைக்கு எடுத்துக் கொள்ளப்படமாட்டாது. மேலும் தற்காலிக பட்டாசு கடைகள் உரிமத்திற்கான கட்டணம் ரூ.800ஐ www.karuvoolam.tn.gov.in என்ற இணையத் தளத்தில் பின் வரும் வழிமுறைகளை பின்பற்றி செலுத்தி அதன் செலுத்துச் சீட்டை இணைக்கவும் அறிவுறுத்தப்படுகிறார்கள்.

உரிமத்திற்கான கட்டணம் செலுத்தும் வழிமுறைகள்:

Goto Website: www.karuvoolam.tn.gov.in <http://www.karuvoolam.tn.gov.in> > Choose Public Challan > Enter Remitter details > Select District Thiruvallur > Select Service receiving department No: 02202 > Select DDO Name: 18030041 > Select Service rendering department No: 02202 > Select receipt typefees > Select sub type Other Collections > Type Amount Rs.800/ > Select Bank for Payment Select Payment method Online or Offline > Submit and Pay.

தேச பக்தி



# ஜவ்வாது மலை பழங்குடியின இளைஞர்களின் கைப்பந்து திறமைக்கு அங்கீகாரம்: வெற்றி பெற்ற அணிகளுக்கு ஆட்சியர் பரிசு, கோப்பை வழங்கினார்



வன உயிரின வார விழா 2026ஐ முன்னிட்டு ஜவ்வாது மலை பழங்குடியின இளைஞர்களுக்காக நடத்தப்பட்ட கைப்பந்து போட்டியில் வெற்றி பெற்ற அணிகளுக்கு மாவட்ட ஆட்சியர் வந்தனா கார்க் இன்று பரிசுகள் மற்றும் கோப்பைகளைவழங்கி பாராட்டினார்.

இந்தியா முழுவதும் ஆண்டுதோறும் அக்டோபர் 2 முதல் 8ம் தேதி வரை வன உயிரின வார விழா கடைப்பிடிக்கப்படுகிறது.

இதையொட்டி, திருவண்ணாமலை வனக் கோட்டம் சார்பில் வன உயிரினங்கள் மற்றும் சுற்றுச்சூழல் பாதுகாப்பு குறித்த விழிப்புணர்வை ஏற்படுத்தும் பல்வேறு நிகழ்ச்சிகள் நடத்தப்பட்டு வருகின்றன. அதன் ஒரு பகுதியாக, ஜவ்வாது மலைப்பகுதியில் வசிக்கும் பழங்குடியின இளைஞர்களை ஊக்குவிக்கும் வகையில், ஜமுனாமரத்தூர் அரசு வனத்துறை மேல்நிலைப் பள்ளியில் கடந்த 3ம் தேதி கைப்பந்து போட்டி நடைபெற்றது.

இதில் ஜவ்வாது மலை கிராமங்களைச் சேர்ந்த 32 அணிகளைச் சேர்ந்த 384 விளையாட்டு வீரர்கள் ஆர்வத்துடன் பங்கேற்றனர். போட்டியை காண 500க்கும் மேற்பட்டோர் திரண்டனர்.

'Knockout' முறையில் நடைபெற்ற போட்டியில், பலாமரத்தூர் அணி முதலிடத்தையும், தேக்கு மரத்தூர் அணி இரண்டாம் இடத்தையும், ஏரிமாமரத்தூர் அணி மூன்றாம் இடத்தையும் பிடித்தன.

வெற்றி பெற்ற அணிகளுக்கு முறையே ரூ.15,000, ரூ.10,000 மற்றும் ரூ.5,000 ரொக்கப் பரிசுகளுடன் கோப்பைகளும் வழங்கப்பட்டன. மாவட்ட ஆட்சியர் வந்தனா கார்க், வெற்றி பெற்ற அணிகளின் தலைவர்களிடம் பரிசுத் தொகை மற்றும் கோப்பைகளை வழங்கி, வீரர்களின் திறமையைப் பாராட்டினார்.

பழங்குடியின இளைஞர்களை விளையாட்டுத் துறையில் ஊக்குவிப்பதுடன், அவர்களிடையே ஒற்றுமை, தன்னம்பிக்கை மற்றும் குழு உணர்வை வளர்க்கும் வகையில் இத்தகைய போட்டிகள் தொடர்ந்து நடத்தப்பட வேண்டும் என நிகழ்ச்சியில் வலியுறுத்தப்பட்டது.

நிகழ்ச்சியில் மாவட்ட வன அலுவலர் கு.சுதாகர், மாவட்ட வருவாய் அலுவலர் அ.சிவசுப்பிரமணியன், உதவி வனப் பாதுகாவலர் தக்ஷக வினோத்ராஜ், ஜமுனாமரத்தூர் வனச்சரக அலுவலர் சு.குணசேகரன், மேல்பட்டு வனச்சரக அலுவலர் வெங்கடாச்சலம், நாடானூர் வனச்சரக அலுவலர் எல்.கமலாசணன் உள்ளிட்ட வனத்துறை அதிகாரிகள் கலந்து கொண்டனர்.

தேச பக்தி நாளிதழில் அனுபவம் உள்ள செய்தியாளர்கள், போட்டோகிராபர்கள், தாலுகா செய்தியாளர்கள் தேவை

தமிழகம் மற்றும் புதுச்சேரி ஆகிய மாநிலங்களில் மாவட்ட மற்றும் தாலுகா வாரியாக அனுபவம் உள்ள பத்திரிக்கை துறையில் சாதிக்க விரும்பும் ஆண் ,பெண் நிருபர்கள் தேவை

G.ராஜா ஆசிரியர்: 9842364068

செய்தி மற்றும் விளம்பர தொடர்புக்கு

R.கண்ணன் இணைஆசிரியர்: 9994422779



திருவண்ணாமலை மாவட்ட ஆட்சித்தலைவர் திருமதி. வந்தனா கார்க்,இ.ஆ.ப., திருவண்ணாமலை மாவட்ட ஆட்சியர் அலுவலக வளாகத்தில் தொழிலாளர் நலன் மற்றும் திறன் மேம்பாட்டு துறை மற்றும் வேலைவாய்ப்பு மற்றும் பயிற்சி துறை சார்பில் மாபெரும் தனியார் துறை வேலைவாய்ப்பு முகாம் நடைபெறவுள்ளதையொட்டி இளைஞர்கள் மற்றும் வேலை நாடுநர்கள் முகாம் குறித்து அறிந்திடும் வகையில் விளம்பர வாகனத்தை கொடியசைத்து துவக்கி வைத்தார்.

# உள்ளூரில் நடைபெறும் புத்தகத் திருவிழாக்களை பொதுமக்கள் பயன்படுத்தி கொள்ள வேண்டும்

## செய்யாறு புத்தகத் திருவிழாவில் வட்டாட்சியர் சீ. திருவேங்கடம் பேச்சு.

திருவண்ணாமலை மாவட்டம் செய்யாறில் நடைபெற்ற புத்தகத் திருவிழா மாலை நேர சிறப்பு உரையரங்கமும் அதனை தொடர்ந்து நிறைவு விழாவும் நேற்று நடைபெற்றது.

திருவண்ணாமலை மாவட்டம், செய்யாறு வட்ட முத்தமிழ் சங்கம் அறம் பதிப்பகம் இணைந்து செய்யாறு புத்தகத் திருவிழாவினை கடந்த 30ஆம் தேதி செய்யாறு சப் கலெக்டர் எல் அம்பிகாஜெயின் துவக்கி வைத்தார் .அதனை தொடர்ந்து தினமும் மாலை சிறப்பு உரையரங்கநிகழ்வுகள்பல்வேறு பேச்சாளர்களைக் கொண்டு நடைபெற்று வந்தன.

நேற்று நடைபெற்ற மாலை நேர உரையரங்க நிகழ்ச்சிக்கு செய்யாறு வட்ட முத்தமிழ் சங்கத்தின் தலைவர் எறும்பூர் கை. செல்வகுமார் தலைமை தாங்கினார் .செயற்குழு உறுப்பினர் வா .இளவரசி நிகழ்ச்சியை தொகுத்து வழங்கினார்.

செய்யாறு கோட்ட தொல் படிமங்கள் என்ற தலைப்பில் வரலாற்று ஆய்வாளர் எறும்பூர் கை. செல்வகுமார் பேசினார். வாசிப்பு எனும் ரசவாதம் என்ற தலைப்பில் அரசு ஊழியர் ஐக்கிய பேரவையின் மாநில தலைமை நிலைய செயலாளர் இடி மின்னல் இனியவன் பேசினார்.

புதுமைப்பித்தன் கதைகள் குறித்து வந்தவாசி தமுஎகச நிர்வாகி பூங்குயில்சிவகுமார்பேசினார். அதனைத் தொடர்ந்து இணை பேராசிரியர் முனைவர் க. வெங்கடேசன் புத்தகம் இல்லாத வாழ்க்கை காற்று இல்லாத கிரகத்திற்கு சமம் என்ற தலைப்பில் வாசித்தலின் முக்கியத்துவம் குறித்து சிறப்புரையாற்றினார்.

இரண்டாவது அமர்வாக நடைபெற்ற புத்தகத் திருவிழா நிறைவு விழாவிற்கு சங்கத் தலைவர் எறும்பூர் கை. செல்வகுமார் தலைமை தாங்கினார்.

சங்க ஆலோசகரும் தொழிலதிபருமான வழக்கறிஞர் பா. ஜெயக்குமார் முன்னிலை வகித்து விழாவில் கலந்து கொண்டோருக்கு நினைவு பரிசுகள் வழங்கிப் பேசினார்.

நிறைவு விழாவிற்கு சிறப்பு விருந்தினராக வருகை தந்த செய்யாறு வட்டாட்சியர் சீ. திருவேங்கடம் நிகழ்ச்சியில் கலந்து கொண்டு பேசியதாவது,

உள்ளூரில் நடைபெறும் புத்தகத் திருவிழாக்களை பொது மக்கள் பயன்படுத்திக் கொள்ள வேண்டும். அதன் மூலம் வாசிப்பை வளர்த்துக் கொள்ளலாம்.



செய்யாறு வட்ட முத்தமிழ்ச்சங்கம் அறம் பதிப்பகத்துடன் இணைந்து நடத்தப்பட்டது அறிந்து மகிழ்ச்சி பாராட்டை தெரிவித்துக் கொள்வதோடு அவர்களை வாழ்த்துகிறேன் .

வாய்ப்புக்கு பெருமை கொள்கிறேன் என்று அவர்பேசினார்.

முடிவில் அறம் பதிப்பகத்தின் உரிமையாளர் மா. அமரேசன் தமது நன்றியுரையில் குறிப்பிட்டு பேசியதாவது,பெரிய புத்தக கண்காட்சி நடத்துவது 100 நாட்களுக்கு முன் திட்டமிடல் வேண்டும். செய்யாறு போன்ற நகரங்களில் புத்தகத்தில் நடத்துவது என்பது போதுமான கால அவகாசம் தேவை .ஆனால் செய்யாறு வட்ட முத்தமிழ் சங்கத் தலைவர் எறும்பூர் கை. செல்வகுமார் புத்தகத் திருவிழா குறித்து பேசியபோது பார்த்துக் கொள்ளலாம் என்றார் .சொன்னவாரே ஓரிரு நாட்களில் செயல் வடிவம் கொடுத்து சொல்லியபடி செய்தும் காட்டினார்.

புத்தகத் திருவிழா வெற்றி பெற காரணமாக இருந்ததமிழ்ச்சங்கதலைவரைவெகுவாகபாராட்டி மகிழ்கிறேன். அதே போல் புத்தகத் திருவிழாவுக்கு ஒத்துழைப்பு தந்த தமிழ்ச்சங்கர்நிர்வாகிகள், உறுப்பினர்கள், உதவி புரிந்த புரவலர் பெருமக்கள், அனைவருக்கும் நன்றியை தெரிவித்துக்கொள்கிறேன். இவ்வாறு அவர் பேசினார்.

# தமிழ் மாநில விஸ்வகர்மா ஐந்தொழிலாளர்கள் சங்கம் சார்பில் ஸ்ரீ விஸ்வகர்மா ஜெயந்தி விழா

திருவள்ளூர் மாவட்டம் மாதவரம் தொகுதி செங்குன்றம் அடுத்த நல்லூர் ஊராட்சி காந்தி நகர் ஸ்ரீ முத்துமாரியம்மன் ஆலய கிராம பொது நலச்சங்க மண்டபத்தில், தமிழ் மாநில விஸ்வகர்மா ஐந் தொழிலாளர்கள் சங்கம் சார்பில் ஸ்ரீ விஸ்வகர்மா ஜெயந்தி விழா சங்கத்தின் மாநில தலைவர் பிரம்மஸ்ரீ வேல்முருகன் ஆச்சாரி, மாநில பொதுச் செயலாளர் பிரம்மஸ்ரீ பாலசந்தர் ஆச்சாரி, மாநில அமைப்பு செயலாளர் பிரம்மஸ்ரீ மணிகண்டன் ஆச்சாரி ஆகியோர் தலைமையில் வெகு சிறப்பாக நடைபெற்றது.

மாநில துணைத்தலைவர் ஸ்பதி பாலாஜி ஆச்சாரி முன்னிலையில் நடைபெற்ற விழாவில், 65வது மடாதிபதி ஸ்ரீஸ்ரீஸ்ரீ சிவராஜ ஞானாச்சார்ய குரு சுவாமிகள், கே.ஆர்.வி கல்வி அறக்கட்டளை நிறுவனர் கே.ஆர். வெங்கடேசன், ஏ கே ஆர் . அறக்கட்டளை நிறுவனர் குமரன், சன் டிவி புகழ் ஜோதிட ரத்னா கே.பி. வித்யாதரன் ஆச்சாரி உள்ளிட்டோர் சிறப்பு அழைப்பாளர்களாக கலந்து கொண்டனர்.

சென்னை ஸ்ரீ காளிகாம்பாள் கமடேஸ்வரர் தேவஸ்தான அறங்காவலர் குழுத் தலைவர் பிரம்மஸ்ரீ இ.எம்.எஸ். மோகன் ஆச்சாரி, அறங்காவலர் பிரம்மஸ்ரீ எஸ். சர்வேஷ்வரன் ஆச்சாரி உள்ளிட்ட சங்க நிர்வாகிகள், உறுப்பினர்கள் மற்றும் பொதுமக்கள் உள்ளிட்ட ஏராளமானோர் கலந்து கொண்டு விஸ்வகர்மா ஜெயந்தி விழாவை சிறப்பித்தனர்.

விழாவையொட்டி கணபதி ஹோமம், விஸ்வகர்மா மகாயாகம் மற்றும் சிறப்பு பூஜைகள் நடைபெற்றன. தொடர்ந்துசிறப்புஅழைப்பாளர்களின் சொற்பொழிவுகள் மற்றும் சங்க நிர்வாகி களின் உரைகள் நடைபெற்றன.







இதில் விஸ்வகர்மா சமூகத்தின் பாரம்பரியம், ஐந்தொழிலாளர்களின் பங்களிப்பு மற்றும் சமூக ஒற்றுமை குறித்து சிறப்புரைகள் இடம்பெற்றன.

# இராணிப்பேட்டை மாவட்டத்தில் 14 வயது பெண் குழந்தைகளுக்கு கர்ப்பப்பை வாய் புற்றுநோய் தடுப்பூசி செலுத்தும் பணி தொடக்கம்

இராணிப்பேட்டை மாவட்டத்தில் 14 வயது பெண் குழந்தைகளுக்கு கர்ப்பப்பை வாய் புற்றுநோய் தடுப்பூசி செலுத்தும் பணி தொடக்கம்.

அனைத்து பெற்றோர்களும் தங்களது பெண் குழந்தைகளுக்கு HPV தடுப்பூசியை தவறாமல் செலுத்தி எதிர்காலத்தில் கர்ப்பப்பை வாய்ப் புற்றுநோய் வராமல் பாதுகாத்துக்கொள்ள வேண்டும்.



இராணிப்பேட்டை மாவட்ட ஆட்சியர் திருமதி.ந.ப்ரியா ரவிச்சந்திரன், இ.ஆ.ப., அவர்கள் வாலாஜா அரசு தலைமை மருத்துவமனையில் இன்று (05.10.2026) மருத்துவம் மற்றும் மக்கள் நல்வாழ்வுத் துறையின் சார்பில் இராணிப்பேட்டை மாவட்டத்தில், 14 வயது உள்ள அனைத்து பெண் குழந்தைகளுக்கும் கர்ப்பப்பை வாய்ப் புற்றுநோய் (Cervical Cancer) தடுப்புக்கான HPV தடுப்பூசி செலுத்தும் பணியினை தொடங்கி வைத்தார்.

இராணிப்பேட்டை மாவட்டத்தில் அரசு மற்றும் அரசு நிதி உதவி பள்ளிகளில் பயிலும் 14 வயது உள்ள சுமார் 7,120 பெண் குழந்தைகளுக்கு சுகாதாரத் துறையின் மூலம் இந்த தடுப்பூசி வழங்கப்பட உள்ளது.

எனவே, அனைத்து பெற்றோர்களும் தங்களது பெண் குழந்தைகளுக்கு பள்ளிகள் வாயிலாக சுகாதாரத்துறையினரால் வழங்கப்படும் HPV தடுப்பூசியை தவறாமல் செலுத்தி எதிர்காலத்தில் கர்ப்பப்பை வாய்ப் புற்றுநோய் வராமல் பாதுகாத்துக்கொள்ளுமாறு மாவட்ட ஆட்சியர் அவர்கள் தெரிவித்துள்ளார்.

மேலும்,அனைத்துபெண் குழந்தைகளின் தாய்மார்களும் கர்ப்பப்பை வாய்ப் புற்றுநோயை ஆரம்ப நிலையிலேயே கண்டறிந்து தடுக்கும் வகையில், குறைந்தபட்சம் வருடத்திற்கு ஒரு முறையாவது கர்ப்பப்பை வாய்ப் புற்றுநோய் பரிசோதனை (Cervical Cancer Screening) செய்து கொள்ள வேண்டும் என்று பெண்குழந்தைகளிடம் மாவட்ட ஆட்சியர் அவர்கள் அறிவுறுத்தினார்.

இந்நிகழ்ச்சியில் இணை இயக்குநர் (மருத்துவப்பணிகள்) மரு.சரவணகுமார், மாவட்ட சுகாதார அலுவலர் மரு.செந்தில் குமார், முதன்மை கல்வி அலுவலர் திருமதி. மோகனா, மருத்துவமனை கண்காணிப்பாளர் மரு.உஷா நந்தினி மற்றும் பலர் கலந்து கொண்டனர்.



திண்டுக்கல் மாவட்டம் பழனி பழனி நதியின் புனித நதியான சண்முக நதியை காப்போம் என்று வாசகத்துடன் we.the.leqders. இயக்கத்தின் சார்பாக தொடர்ந்து 6 வது வாரமாக சண்முக நதி சுற்றியுள்ள ஆக்கிரம்புகளை மற்றும் அமல செடிகளை மற்றும் பக்தர்கள் புனித நீராடி விட்டு அங்கங்கே தங்கள் உடமைகளை கழட்டி விட்டு சென்ற வேஷ்டி சட்டைகளை மற்றும் துணிமணி உருப்படிகள் அனைத்தையும் அங்கங்கே பெருக்கி சுத்தம் செய்து மீண்டும் சண்முக நதி என்கிற புனிதமான நதியே அமலைச் செடிகள் இல்லாத ஒரு நதியாக உருவாக்க வேண்டும் என்று பழனி பகுதியில் உள்ள அனைத்து பொதுமக்களும் மற்றும் சண்முக ஆய்வாளர்களும் கலந்து கொண்டு சுத்தம் செய்த போது ஜேசிபி இயந்திரம் மற்றும் ஹிட்டாச்சி இயந்திரம் மற்றும் ஆட்கள் உள்பட ஏராளமான கலந்து கொண்டு சண்முக நதியை சுத்தம் செய்த்னர்

Printed by S.BALASUBRAMANIAN and Published by M.VEERAMANI on behalf of M.VEERAMANI, Printed at "SANKARJI COMPUTER GRAPHICS PRINTER", No. 8/31, Seegampatty, K.Pudupatty (Post), Kulithalai (Taluk) Karur (District) - 639 105, Published At No. 1080. Kattupatti Road. Viralimalai (Taluk), Pudukkottai (District)-621316 EDITOR: GRAJA